வாய்க்கால் வெட்டி

# 736ம் ஆண்டு துவக்கவிழாவில் காலிங்கராயனுக்கு மரியாதை

ஈரோடு, ஜன.19: காலிங்கராயன் கால்வாய் வெட்டி 736ம் ஆண்டு விழாவையொட்டி அக்கால்வாய் வெட்டிய காலிங்கராயன் நினைவாக மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

ஈரோடு மாவட்டம் காலிங்கராயன் பாளையத்தில் பவானி ஆற்றின் குறுக்கே காலிங்கராயன் அணைக்கட்டு அமைக்கப்பட்டு, 1282ம் ஆண்டு காலிங்கராயன் வாய்க்கால் வெட்டப்பட்டது. வெள்ளோடு அருகே கனகபுரத்தை சொந்த ஊராக கொண்ட காலிங்கராயன், வாய்க்கால் வெட்டினார். 91கி.மீ., தூரத்திற்கு மொத்தம் 15,750 ஏக்கர் நிலங்கள் நேரடியாகவும், 10 ஆயிரம் ஏக்கர் நிலம் மறைமுகமாகவும் பாசனம் பெறும் வகையில் காலிங்கராயன் வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. பிறகு அவரோ, அவரை சார்ந்த நெருங்கிய உறவினர்களோ இந்த வாய்க்கால் நீரை பாசனத்துக்கு பயன்படுத்தக்கூடாது என்பதற்காக பொள்ளாச்சி அருகே ஜமீன் ஊத்துக்குளிக்கு காலிங்கராயன் குடிபெயர்ந்து சென்று விட்டார்.



கொடுமுடி அருகே ஒத்தக்கடை கணபதிபாளையத்தில் நடந்த காலிங்கராயன் விழாவில் காலிங்கராயன் பரம்பரையைச்சேர்ந்த அருண்குமார் காலிங்கராயர், சித்தார்த்காலிங்கராயர் ஆகியோர் கலந்துகொண்டு காலிங்கராயன் படத்துக்கும் காலிங்கராயன் கால்வாய்க்கும் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

வாய்க்கால் வெட்டி 735 ஆண்டு நேற்று நிறைவு பெற்று 736வது ஆண்டில் அடியெடுத்து வைத்தது. அதனை நினைவு கூறும் வகையில் காலிங்கராயனின் உருவப்படத்திற்கு ஈரோடு கொங்கு கலையரங்கில் கொங்குவேளாளர் இளைஞர் சங்கம் சார்பில் மாலை அணிவித்து மரியாதைசெலுத்தும்நிகழ்ச்சி நேற்று நடந்தது.

சங்கத்தலைவர் முத்துசாமி தலைமையில், செயலாளர் சின்னசாமி, முன்னாள் தலைவர்வேலுசாமி, செயற்குழு உறுப்பினர் குழந்தைவேலு, முன்னாள் கவுன்சிலர் சுந்தரசாமி உட்பட பலர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதேபோல வெள்ளோடு, சாவடிபாளையம், தாமரைப்பாளையம், ஊஞ்சலூர், பாசூர் உள்ளிட்ட 15 கிராமங்களிலும் காலிங்கராயனுக்கு நினைவு கூர்ந்து விழா கொண்டாடப்பட்டது.

**கொடுமுடி:** கொடுமுடி அருகே காலிங்கராயன் நாள் விழா பொங்கல் வைத்து கொண்டாடப்பட்டது. நேற்று ஈரோடு அருகே சாத்தம்பூர், சாவடிப்பாளையம்புதூர், சாவடிப்பாளையம், பஞ்சலிங்கபுரம், கணபதிபாளையம் நால்ரோடு, சோளங்காபாளையம், கொளாநல்லி, ஊஞ்சலூர், காசிபாளையம், கருக்கம்பாளையம், கொளத்துப்பாளையம், பணப்பாளையம், தாமரைப்பாளையம், கல்வெட்டுப்பாளையம், ஒத்தக்கடை கணபதிபாளையம், சாலைப்புதூர், ஆவுடையார்பாறை ஆகிய பகுதிகளைச்சேர்ந்த விவசாயிகள் தங்களது நன்றியை தெரிவிக்கும்விதமாக காலிங்கராயனுக்கு பொங்கல் வைத்து வழிபட்டனர்.

இந்தவிழாவில் காலிங்கராயனின் பரம்பரையை சேர்ந்த 36 வது பட்டம் அருண் காலிங்கராயர், 37வது பட்டம் சித்தார்த் காலிங்கராயர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**பவானி:** கொங்குநாடு மக்கள்தேசியக்கட்சி சார்பில் காலிங்கராயன் அணைக்கட்டில் அவரது அலங்கரிக்கப்பட்ட உருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மேலும், வாய்க்காலில் ஓடும் தண்ணீரில் மலரினைத் தூவியும் மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது. ஈரோடுவடக்குமாவட்டச் செயலாளர் துரைராஜா தலைமை தாங்கினார். மாவட்டத்துணைச்செயலாளர் தமிழ்செல்வன், மாவட்ட துணை செயலாளர் தமிழ்செல்வன், பவானி நகரச் செயலாளர் ஸ்ரீகுமார், பவானி ஒன்றியச் செயலாளர் மணி (மேற்கு), பிரகாஷ் (வடக்கு), மாவட்ட மாணவரணிச் செயலாளர் கோகுல், நகர அவைத் தலைவர் செல்லவேலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.